சந்திப்பு...



பிரதமர் நரேந்திர மோடியை மரியாதை நிமித்தமாக வெள்ளிக்கிழமை சந்தித்த ஜார்க்கண்ட் ஆளுநர் சி.பி. ராதாகிருஷ்ணன்.

# வங்கதேச பிரதமர் ஷேக் ஹசீனா இந்தியா வருகை: குடியரசுத் தலைவர், பிரதமர் மோடியை சந்திக்கிறார்

**புது தில்லி, ஜூன் 21:** வங்கதேச பிரதமர் ஷேக் ஹசீனா இரண்டு நாள் பயணமாக இந்தியாவுக்கு வெள்ளிக்கிழமை வந்தார். இரு நாடுகளிடையேயான நெருங்கிய உறவை மேலும் வலுப்படுத்தும் நோக்கில் இந்தப் பயணத்தை அவர் மேற்கொண்டிருப்பதாக தெரிவிக்கப் பட்டுள்ளது.

மக்களவைத் தேர்தலுக்குப் பிறகு மத்தியில் புதிய அரசு பதவியேற்ற பின்னர், இந்திய வரும் முதல் வெளிநாட்டு தலைவர் இவர் ஆவார். முன்னதாக, குடியரசுத் தலைவர் மாளிகை வளாகத்தில் கடந்த 9-ஆம் தேதி நடைபெற்ற பிரதமர் மோடி மற்றும் மத்திய அமைச்சர்கள் பதவியேற்பு விழாவில் பங்கேற்ற இவர், தற்போது மீண்டும் இந்தியா வந்துள்ளார்.

இந்தப் பயணத்தின் ஒருபகுதியாக குடியரசுத் தலைவர் திரௌபதி முர்மு மற்றும் குடியரசு துணைத் தலைவர் ஜகதீப் தன்கர் ஆகியோரை மரியாதை நிமித்தமாக ஷேக் ஹசீனா சந்திக்கிறார்.



இரண்டு நாள் பயணமாக இந்தியா வந்த வங்கதேச பிரதமர் ஷேக் ஹசீனாவை தில்லி விமானநிலையத்தில் வெள்ளிக்கிழமை வரவேற்ற வெளியுறவுத் துறை இணையமைச்சர் கீர்த்தி வர்தன் சிங்.

பிரதமர் மோடியை சனிக்கிழமை சந்தித்து ஆலோசனை நடத்த உள்ளார். இந்தச் சந்திப்பின்போது, இரு நாடுகளிடையேயான உறவை மேலும் வலுப்படுத்துவது குறித்து விரிவான ஆலோசனை மேற்கொள்ளப்படும் என்பதோடு, பல்வேறு துறைகளில் இரு நாடுகளிடையே ஒத்துழைப்பை வலுப்படுத்துவதற்கான ஒப்பந்தங்கள் கையொப்பமாகும் என எதிர்பார்க்கப்படுகிறது.

இந்தியாவின் முக்கியத்துவம் வாய்ந்த கூட்டு நாடாக வங்கதேசம் திகழ்கிறது. பாதுகாப்பு, வர்த்தகம், வணிகம், எரிசக்தி, அறிவியல்-தொழில்நுட்பம், கடல்சார் பாதுகாப்பு என பல்வேறு துறைகளில் இரு நாடுகளும் கூட்டுறவை விரிவுபடுத்தியுள்ளன.

தெற்காசிய அளவில் வங்கதேசத்தின் மிகப்பெரிய வர்த்தக கூட்டுறவு நாடாகவும், ஆசிய அளவில் இரண்டாவது மிகப்பெரிய வர்த்தக கூட்டு நாடாகவும் இந்திய திகழ்வது குறிப்பிடத்தக்கது.

# 98 இந்திய ஹஜ் யாத்ரீகர்கள் உயிரிழப்பு: வெளியுறவு அமைச்சகம்

**புது தில்லி, ஜூன் 21:** சவூதி அரேபியாவுக்கு புனித ஹஜ் யாத்திரை மேற்கொண்ட 1.75 லட்சம் இந்தியர்களில் 98 பேர் உயிரிழந்ததாக இந்திய வெளியுறவு அமைச்சகம் தெரிவித்தது.

இது தொடர்பாக வெளியுறவு அமைச்சக செய்தித் தொடர்பாளர் ரண்தீர் ஜெய்ஸ்வால் கூறுகையில் 'கடந்த ஆண்டு ஹஜ் யாத்திரை காலகட்டத்தில் 187 இந்தியர்கள் இறந்தனர். இந்த ஆண்டு 1.75 லட்சம் இந்தியர்கள் மெக்காவுக்கு புனிதப்பயணம் மேற்கொண்டனர். மே 9 முதல் ஜூலை 22 வரை ஹஜ் யாத்திரைக் காலமாகும். இந்த ஆண்டில் இதுவரையில் 98 இந்தியர்கள் உயிரிழந்தனர். இயற்கையான காரணங்கள், நாள்பட்ட நோய்கள், முதுமை ஆகியவற்றால் இந்த உயிரிழப்புகள் நேரிட்டுள்ளன' என்று தெரிவித்தார்.

மருத்துவ உதவிகள்: நிகழாண்டு இந்தியாவில் இருந்து ஹஜ் யாத்திரை மேற்கொண்ட இந்தியர்களுக்கு மருத்துவ வசதி அளிப்பதற்காக 356 மருத்துவர்களும், துணை மருத்துவர்களும் பணியில் ஈடுபட்டதாகவும் மத்திய சுகாதாரத்துறை செயலாளர் அபூர்வா சந்திரா தெரிவித்தார்.

இது தொடர்பாக மத்திய சிறுபான்மையினர் நலத் துறையுடன் இணைந்து 'ஹஜ் யாத்திரைக்கு மருத்துவ வசதிகள்' என்ற தலைப்பில் அவர் தில்லியில் வெள்ளிக்கிழமை ஓர் ஆவணத்தை வெளியிட்டார். இந்த நிகழ்வில் ஜெட்டாவில் உள்ள இந்தியத் தூதர் முகமது ஷாஹித் ஆலம் காணொலி மூலம் பங்கேற்றார். இதில் மத்திய சுகாதாரத் துறை செயலாளர் அபூர்வா சந்திரா பேசுகையில், 'இந்தியாவில் இருந்து சென்ற ஹஜ் யாத்ரீகர்களில் 40,000 பேர் 60 வயதுக்கு மேற்பட்டவர்கள்.

இந்த ஆண்டு சவூதி அரேபியாவில் நிலவும் கடுமையான வானிலையைக் கருத்தில் கொண்டு யாத்ரீகர்களுக்கு 24 மணி நேரமும் சேவைகளை வழங்கினோம்.

ஹஜ் யாத்ரீகர்களுக்குத் தேவையான மருத்துவ சேவைகள் குறித்து நாங்கள் தொடர்ந்து கண்காணித்து வருகிறோம் என்றார்.

# வெப்ப அலை: நாடு முழுவதும் 143 பேர் உயிரிழப்பு

**புது தில்லி, ஜூன் 21:** நாட்டின் பல்வேறு பகுதிகளில் வெப்ப அலையின் தாக்கம் நீட்டித்து வரும் நிலையில், கடந்த மார்ச் 1-ஆம் தேதி முதல் ஜூன் 20-ஆம் தேதி வரையில் 'வெப்பவாதம்' (ஹீட்ஸ்ட்ரோக்) காரணமாக உயிரிழந்தோரின் எண்ணிக்கை 143-ஆக உயர்ந்துள்ளதாக மத்திய சுகாதாரத்துறை அமைச்சக வட்டாரங்கள் வெள்ளிக்கிழமை தெரிவித்தன.

இருப்பினும், வெப்பவாதத்தால் உயிரிழந்தோரின் எண்ணிக்கை மேலும் அதிகரிப்பதற்கான வாய்ப்புகள் உள்ளன. இதுதொடர்பான முழுமையாக தகவல்களை மாநிலங்கள் வழங்காததால் தேசிய நோய்க் கட்டுப்பாட்டு மையத்தால் (என்சிடிசி) வெளியிடப்படும் அறிக்கையில் அதிகாரபூர்வ உயிரிழப்புகள் குறித்த இறுதி தகவல்கள் இடம்பெறவில்லை. அதேபோல் சில சுகாதார மையங்களும் வெப்பவாதத்தால் உயிரிழந்தோர் குறித்த எண்ணிக்கையை முழுமையாக வெளியிடவில்லை.

வெப்பவாதத்தால் ஜூன் 20-ஆம் தேதி மட்டுமே 14 பேர் உயிரிழந்ததாக அதிகாரபூர்வமாக தெரிவிக்கப்பட்டுள்ளது. மேலும், 9 பேர் இதே காரணத்தால் உயிரிழந்திருக்கக்கூடும் என சந்தேகிக்கப்படும் நிலையில் மார்ச் 1 முதல் ஜூன் 20 வரையில் உயிரிழந்தோரின் எண்ணிக்கை 114-யிலிருந்து 143-ஆக அதிகரித்தது.

அதிகபட்சமாக உத்தர பிரதேசத்தில் 35 பேரும் தில்லியில் 21 பேரும் பிகார் மற்றும் ராஜஸ்தானில் தலா 17 பேரும் உயிரிழந்தனர். வெப்பவாதத்தால் 41,000-க்கும் மேற்பட்டோர் பாதிக்கப்பட்டுள்ளனர்.

# வீட்டுப் பணியாளர்கள் சித்திரவதை: ஹிந்துஜா குழும குடும்பத்தினருக்கு நான்கரை ஆண்டுகள் சிறை

**ஜெனீவா, ஜூன் 21:** வீட்டுப் பணியாளர்களை சித்திரவதை செய்த வழக்கில், ஹிந்துஜா குழும குடும்பத்தினரான பிரகாஷ் ஹிந்துஜா உள்பட நால்வருக்கு 4 முதல் நான்கரை ஆண்டுகள் வரை சிறைத் தண்டனை விதித்து ஸ்விட்சர்லாந்து நீதிமன்றம் வெள்ளிக்கிழமை தீர்ப்பளித்தது.

வாகன உற்பத்தி, நிதி சேவைகள், தொலைத்தொடர்பு உள்ளிட்ட பல்வேறு துறைகளில் ஹிந்துஜா குழுமம் முன்னிலையில் உள்ளது. இந்தக் குழுமத்தின் தலைவர் ஸ்ரீசந்த் ஹிந்துஜாவின் சகோதரரும், தொழிலதிபருமான



நீதிமன்றத்துக்கு வந்த ஹிந்துஜா குடும்பத்தினர்.

பிரகாஷ் ஹிந்துஜா குடும்பத்தினருக்குச் சொந்தமாக ஸ்விட்சர்லாந்தின் ஜெனீவா நகரில் ஆடம்பர மாளிகை உள்ளது.

இந்தமாளிகையில் பணியாற்றிய இந்திய பணியாளர்களை பிரகாஷ் ஹிந்துஜா (78), அவரின் மனைவி கமல் ஹிந்துஜா (75), மகன் அஜய், மருமகள் நம்ரதா ஆகிய நால்வர் கொத்தடிமை போல நடத்தியதாக குற்றச்சாட்டு எழுந்தது. அத்துடன் அந்தப் பணியாளர்களின் கடவுச்சீட்டை (பாஸ்போர்ட்) பறிமுதல் செய்ததுடன், ஸ்விட்சர்லாந்து கரன்சியில் அவர்களுக்கு ஊதியம் வழங்காமல், இந்திய ரூபாயில் மிகக் குறைந்த ஊதியம் வழங்கி, ஒரு நாளைக்கு 18 மணி நேரம் வரை பணியாற்ற நால்வரும் கட்டாயப்படுத்தியதாகக் கூறப்படுகிறது.

இதுதொடர்பான வழக்கு ஜெனீவாவில் உள்ள நீதிமன்றத்தில் நடைபெற்று வந்தது. இந்நிலையில், அவர்கள் மீதான குற்றச்சாட்டை உறுதி செய்த நீதிமன்றம், பிரகாஷ் ஹிந்துஜா மற்றும் அவரின் மனைவிக்குத் தலா நான்கரை ஆண்டுகளும், மகன் அஜய் மற்றும் மருமகளுக்குத் தலா 4 ஆண்டுகளும் சிறைத் தண்டனை விதித்து வெள்ளிக்கிழமை தீர்ப்பளித்தது.

# 'நீட்' குளறுபடி: காங்கிரஸ் நாடு தழுவிய போராட்டம்

**புது தில்லி, ஜூன் 21:** இளநிலை மருத்துவப் படிப்புகளுக்கான தேசிய தகுதிகாண் நுழைவுத் தேர்வில் (நீட்) நிகழ்ந்த குளறுபடிகளுக்கு எதிராக நாடு முழுவதும் காங்கிரஸ் கட்சியினர் வெள்ளிக்கிழமை போராட்டத்தில் ஈடுபட்டனர்.

கடந்த மே 5-ஆம் தேதி நாடு முழுவதும் நீட் தேர்வு நடத்தப்பட்டது. அப்போது பிகார், ராஜஸ்தானில் வினாத்தாள் கசிவு, தேர்வு எழுதிய 1,500-க்கும் மேற்பட்ட மாணவர்களுக்குக் கருணை மதிப்பெண் வழங்கப்பட்டது சர்ச்சைக்கு வழி வகுத்தது. இதன் காரணமாக நீட் தேர்வை ரத்து செய்ய எதிர்க்கட்சிகள் வலியுறுத்தி வருகின்றன.

இந்நிலையில், அந்தத் தேர்வில் நிகழ்ந்த குளறுபடிகளுக்கு எதிராக தில்லியில் உள்ள பாஜக தலைமையகம் எதிரே காங்கிரஸ் கட்சியினர் வெள்ளிக்கிழமை போராட்டத்தில் ஈடுபட்டனர்.

அந்த யூனியன் பிரதேச காங்கிரஸ் தலைவர் தேவேந்தர் யாதவ் தலைமையில் இந்தப் போராட்டம் நடைபெற்றது.

மேலும் தெலங்கானா தலைநகர் ஹைதராபாதில் மத்திய அமைச்சர் கிஷண் ரெட்டியின் இல்லத்துக்கு அருகிலும், குஜராத்தின் அகமதாபாத் நகரில் உள்ள குஜராத் பல்கலைக்கழகம் எதிரிலும் காங்கிரஸார் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

இதேபோல உத்தர பிரதேசம், பஞ்சாப், அருணாசல பிரதேசம், நாகாலாந்து, சத்தீஸ்கர், கர்நாடகம் உள்பட பல்வேறு மாநிலங்களில் அக்கட்சியினர் போராட்டத்தில் ஈடுபட்டனர்.


எழும்பூர் II கிளை
எண்.16, போலீஸ் கமிஷனர் ஆபிஸ் ரோடு, P.B.எண்.516, எழும்பூர், சென்னை-600008,
Ph: 94443 96483, E-mail: cb16014@canarabank.com
Canara Bank கனரா வங்கி

அசையா சொத்து சுவாதீன அறிவிப்பு [SECTION 13(4)]

அங்கீகரிக்கப்பட்ட அதிகாரி, கனரா வங்கி
இடம் : சென்னை
தேதி : 19.06.2024

ஃபெட்பேங்க் ஃபைனான்சியல் சர்வீசஸ் லிட். ஏல அறிவிப்பு

இதன் மூலம் பொதுமக்களுக்கு பரவலாக அறிவிக்கப்படுவது யாதெனில், ஃபெட்பேங்க் ஃபைனான்சியல் சர்வீசஸ் லிட்., நிறுவனமானது தவணை தவறிய அல்லது கடன் கட்டுவதில் தவறிழைத்த அல்லது பிணைய மதிப்பை மீறிய கடன் வாடிக்கையாளர்கள் ஆகியவற்றின் கணக்குகளுக்கு உரிய தங்க ஆரணங்களை ஏலம் விட முடிவு செய்துள்ளது. ஏலமானது கீழே குறிப்பிடப்பட்டுள்ள தொடர்புடைய அந்தந்த கிளைகளில் புதன்கிழமை 03.07.2024 நாளன்று காலை 10.00 மணி முதல் நண்பகல் 12.00 மணி வரை நடைபெறும்.

நாள்: 22.06.2024
இடம் : சென்னை
ஒப்/- அதிகாரப்பூர்வ கையெழுத்துதாரர்-க்காக ஃபெட்பேங்க் ஃபைனான்சியல் சர்வீசஸ் லிட்.,

IndusInd Bank இன்டஸ்இண்ட் வங்கி லிமிடெட்
FRR குரூப் இன்டஸ்இண்ட் வங்கி, எண் 25, ஸ்டீப்பிள் ரீச், A பிளாக், 3ஆவது தளம், கதீட்ரல் சாலை, கோபாலபுரம், சென்னை-600086
பிற்சேர்க்கை-IV-A [பார்க்க விதி 8(6)]
அசையாச் சொத்துக்கான விற்பனை அறிவிப்பு
இடம்: சென்னை
நாள்: 22.06.2024
அதிகாரப்பூர்வ அலுவலர் இன்டஸ்இண்ட் வங்கி லிட்.

IndusInd Bank இன்டஸ்இண்ட் வங்கி லிமிடெட்
FRR குழுமம், இன்டஸ்இண்ட் வங்கி, எண். 25, ஸ்டீப்பிள் ரீச், A பிளாக், 3ஆவது தளம், கதீட்ரல் சாலை, கோபாலபுரம், சென்னை-600086
பிற்சேர்க்கை - IV-A [பார்க்க விதி 8(1)] சுவாதீன அறிவிப்பு
அசையாச் சொத்துக்கான விற்பனை அறிவிப்பு
இடம்: சென்னை
நாள்: 22.06.2024

ADITYA BIRLA CAPITAL
PROTECTING INVESTING FINANCING ADVISING
ஆதித்யா பிர்லா ஃபைனான்ஸ் லிமிடெட்
பிற்சேர்க்கை-IV-'A'
அசையா சொத்துகளின் விற்பனைக்கான விற்பனை அறிவிப்பு
தேதி : 21.06.2024
இடம் : சென்னை
LAN: ABFCH2TER00001002716

FEDERAL BANK
விற்பனை அறிவிப்பு
அசையா சொத்து விபரம்
சொத்தின் குறைந்தபட்ச கேட்பு விலை: ₹ 1,98,00,000/-
மற்றும் டேவணித்தொகை: ₹ 19,80,000/-
https://federalbank.co.in/web/guest/tender-notices
இடம்: சென்னை
தேதி: 20.06.2024